சுருக்கம்

திருச்சிராப்பள்ளி மாநகராட்சிக்கு ரூ.144.86 கோடி மதிப்பீட்டில் குடிநீர் திட்ட மேம்பாட்டு பணிகள் செயல்படுத்துதல் நிர்வாக அனுமதி வழங்கி ஆணையிடப்பட்டது – திருத்தங்கள் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி.2)துறை

அரசாணை (நிலை) எண். 140 நாள் 10.08.2009

மீண்டும் படிக்கவும்:

அரசாணை (நிலை) எண். 134, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 25.9.2007

மேலும் படிக்கவும்:

நகராட்சி நிர்வாக இயக்குநரின் கடித எண்.2620/2007/WS3, நாள் 30.3.2009 மற்றும் 21.7.2009

- - - - -

ஆணை:

முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், திருச்சிராப்பள்ளி மாநகராட்சியில் ரூபாய்.144.86 கோடி (ரூபாய் நூற்று நாற்பத்தி நான்கு கோடி மற்றும் எண்பத்தாறு இலட்சம் மட்டும் ) மதிப்பீட்டில் குடிநீர் திட்டமேம்பாட்டுப் பணிகளை செயல்படுத்த நிர்வாக அனுமதி வழங்கி ஆணையிடப்பட்டது.

2. இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், திருச்சிராப்பள்ளி மாநகராட்சி குடிநீர் திட்ட மேம்பாட்டுத் திட்டம், 18.9.2007 அன்று நடைபெற்ற அதிகாரமளிக்கப்பட்ட குழுவின் கூட்டத்தில் வைக்கப்பட்டதாகவும், இதுதொடர்பாக குழு கீழ்க்காணும் தீர்மானங்களை நிறைவேற்றியுள்ளதாகவும் நகராட்சி நிர்வாக இயக்குநர் தெரிவித்துள்ளார்:-

I) திருச்சிராப்பள்ளி மாநகராட்சி குடிநீர் திட்ட மேம்பாட்டு திட்ட செயற்குறிப்பிற்கு ஒப்புதல் அளித்தல் மற்றும் இத்திட்டத்தினை ரூ.143.00 கோடி உத்தேச மதிப்பீட்டிலும், ரூ.3.53 கோடி ஆண்டு பராமரிப்புச் செலவிலும் செயல்படுத்துவதற்கென நிர்வாக அனுமதியளித்தல்

II) மூலதன மானியமாக ரூ.25.00 கோடி அனுமதியளித்தல்

III) கீழ்க்காணும் நிதியாதாரங்களுக்கு ஒப்புதல் அளித்தல்

| வ.எண். | நிதி ஆதாரம் | ரூபாய் கோடியில் | சதவிகிதம் |
|---|---|---|---|
| 1. | மாநகராட்சி பொதுநிதி / பொதுமக்கள் பங்களிப்பு | 24.84 | 17.37% |
| 2 | தமிழ்நாடு நகர்ப்புர உள்கட்டமைப்பு மற்றும் நிதி சேவைகள் கழகம் மூலமாக ஜப்பான் நிதி நிறுவனத்தின் நிதியுதவி | 93.16 | 65.15% |
| 3 | தமிழ்நாடு நகர்ப்புர உள்கட்டமைப்பு மற்றும் நிதி சேவைகள் கழகம் மூலமாக ஜப்பான் நிதி நிறுவனத்தின் நிதியுதவியின் கீழ் மூலதன மான்யம் | 25.00 | 17.48% |
| | மொத்தம் | 143.00 | 100% |

3. இதனடிப்படையில், மேலே படிக்கப்பட்ட அரசாணையில் வெளியிடப்பட்டுள்ள ஆணைகளுக்கு சில திருத்தங்களை வெளியிடுமாறு நகராட்சி நிர்வாக இயக்குநர் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார். மேலே படிக்கப்பட்ட அரசாணையில் அனுமதிக்கப்பட்ட நிதி ஆதாரத்தில் மாநில அரசின் மானியம் ரூ.25.00 கோடி என்பதற்குப் பதிலாக தமிழ்நாடு நகர்ப்புர உள்கட்டமைப்பு மற்றும் நிதி சேவைகள் கழகம் மூலமாக ஜப்பான் நிதி நிறுவனத்தின் நிதியுதவியின் கீழ், மூலதன மானியம் ரூ.25.00 கோடி என்ற திருத்தமும், மேலும் படிக்கப்பட்ட அரசாணையில் 7வது பத்தியில் குறிப்பிடப்பட்டுள்ள ரூ.144.86 கோடி மதிப்பீடு என்பதற்குப் பதிலாக ரூ.143.00 கோடி மதிப்பீடு என்று திருத்தமும் வழங்குமாறு நகராட்சி நிர்வாக இயக்குநர் தனது கடிதத்தில் கேட்டுக் கொண்டுள்ளார்.

4. நகராட்சி நிர்வாக இயக்குநரின் மேற்காணும் கருத்துருவை கவனமான பரிசீலனைக்குப் பின்னர் அரசு ஏற்றுக் கொண்டு, அரசாணை (நிலை) எண்.134, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி.2)துறை, நாள் 25.9.2007க்கு கீழ்க்காணும் திருத்தங்களை வெளியிடுகிறது.

<u>திருத்தங்கள்</u>

(1) மேலே படிக்கப்பட்ட அரசாணையின் பத்தி 7–ல் உள்ள அட்டவணைக்குப் பதிலாக கீழ்க்காணும் அட்டவணையை மாற்றிப் படிக்கவும்:

| வ.எண். | நிதி ஆதாரம் | ரூபாய் கோடியில் | சதவிகிதம் |
|---|---|---|---|
| 1. | மாநகராட்சி பொதுநிதி / பொதுமக்கள் பங்களிப்பு | 24.84 | 17.37% |
| 2 | தமிழ்நாடு நகர்ப்புர உள்கட்டமைப்பு மற்றும் நிதி சேவைகள் கழகம் மூலமாக ஜப்பான் நிதி நிறுவனத்தின் நிதியுதவி | 93.16 | 65.15% |

FROM : FAX NO. : Aug. 12 2009 12:18PM P2

| | | | |
|---|---|---|---|
| 3 | தமிழ்நாடு நகர்ப்புர உள்கட்டமைப்பு மற்றும் நிதி சேவைகள் கழகம் மூலமாக ஜப்பான் நிதி நிறுவனத்தின் நிதியுதவியின் கீழ் மூலதன மான்யம் | 25.00 | 17.48% |
| | மொத்தம் | 143.00 | 100% |

(2) மேலும் அரசாணையின் 8வது பத்தியில் குறிப்பிடப்பட்டுள்ள "ரூ.144.86 கோடி (ரூபாய் நூற்று நாற்பத்தி நான்கு கோடி மற்றும் எண்பத்தாறு இலட்சம் மட்டும் ) மதிப்பீட்டில்" என்பதற்குப் பதிலாக "ரூ.143.00கோடி (ரூபாய் நூற்று நாற்பத்தி மூன்று கோடி மட்டும் ) மதிப்பீட்டில்" என்று மாற்றிப் படிக்கவும்.

5. இவ்வாணை நிதித்துறையின் அலுவல் சார்பற்ற எண். 43121/MAWS /09, நாள் 6.8.2009–ல் வழங்கப்பட்டுள்ள இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

நிரஞ்சன் மார்டி,
அரசுச் செயலாளர்.

பெறுநர்
நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை–5
மேலாண்மை இயக்குநர் மற்றும் தலைமை செயல் அலுவலர்,
தமிழ்நாடு நகர்ப்புர உள்கட்டமைப்பு நிதி சேவை நிறுவனம், சென்னை–17.
ஆணையர், திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, திருச்சிராப்பள்ளி.
மாவட்ட ஆட்சித் தலைவர், திருச்சிராப்பள்ளி.
மாநில கணக்காயர், சென்னை–18
மாநில கணக்காயர், சென்னை 18 (பெ.உ)
உள்ளுறை தணிக்கை அலுவலர், சென்னை–9
நகல்
முதுநிலை நேர்முக உதவியாளர், மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9
முதுநிலை நேர்முக உதவியாளர், மாண்புமிகு துணை முதலமைச்சர் அலுவலகம், சென்னை.9
முதுநிலை நேர்முக உதவியாளர், நிதியமைச்சர் அலுவலகம், சென்னை–9
நிதித்துறை, சென்னை–9
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (குவ1/மாந2/வ.செ.)துறை, சென்னை–9.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்.